★ புலிகளின் யுக்திகளை கண்டுபிடிக்க முடியாது

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 16 இதழ் 196
யாழ்ப்பாணம் புதன்கிழமை 01—9—1993

## படையினர் பரிதவிப்பு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளோடு போரிடத் தொடங்கி பதின்மூன்று வருடங்களாகிவிட்டபோதிலும் அவர்களது யுத்த தந்திரோபாயங்களை இதுவரையும் கண்டுபிடிக்க முடியாதுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
தனது பெயரை வெளியிட விரும்பாத அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளின் சிறுவர் படையணி எனக் கேலி செய்வதெல்லாம் எம்மை நாமே ஏமாற்றுவதாகும். எது உண்மையான இலக்கு, ஒரு தாக்குதலில் எ...
(4-ம் பக்கம் பார்க்க)

## கடற் கரும்புலிகளுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
வடமராட்சிக் கடலில் கடற்படையின் டோரா படகைத் தகர்த்துப் பெரும் சாதனை புரிந்த கடற் கரும்புலிகளுக்கு நேற்று மக்கள் தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.
யாழ். குடாநாடு எங்கும் நேற்று கடற் கரும்புலிகள் மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோரின் உருவப் படங்கள் தாங்கிய ஊர்திகள், ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.
இந்த ஊர்தி ஊர்வலத்தின் போது கன்னாதிட்டியில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது. நல்லூர் பிரதேச அமைப்புப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழீழ நீதி, நிர்வாகப்
(4-ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னைக்கு தீர்வுகாண

# புதியதொரு சமாதானத் திட்டம்

# தொண்டாவிடம் ஒப்படைப்பு!

## லண்டனில்வைத்து புலிகள் கையளித்தனர்

(கொழும்பு)
இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் புதிய சமாதானத்திட்டம் ஒன்றை அமைச்சர் தொண்டமானிடம் லண்டனில் வைத்து சமர்ப்பித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அமைச்சர் தொண்டமான் ...த்தை நடத்தியதாகவும் இத் திட்ட பேச்சுவார்த்தை பற்றிய அமைதிக்கான புதிய முறைச் சந்திப்பின்போது அமைதி பரிந்துரைகளை விரைவில் அர... மேற்கொள்ளும் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகளிடம் அவர் ஒப்படைக்கவுள்ள பொருட்டு பாரீஸ் மற்றும் புலிகள் தன்னிடம் சமர்ப்பித்தனர் எனக் கூறப்படுகிறது. லண்டன் நகரங்களுக்கு அண்மையில் சென்றார் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். கடந்த 1990ம் ஆண்டு மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுடன் நடத்திய பேச்சு அங்குள்ள விடுதலைப் புலிகளின் லண்டன், பாரீஸ் நகரப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் புலிகளுடன் தான் நடத்தி
(4-ம் பக்கம் பார்க்க)

## மணலாறு/பலாலி... — [illegible]

## யாழ். வந்து புலிகளுடன் பேச தொண்டமான் தயாராம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து இனப் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வு ஒன்றை மேற்கொள்வதற்கு தான் தயாராக இருப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.
இதேவேளையில் அமைச்சர் தொண்டமானிடம் சமர்ப்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் சமாதானத் தீர்வுத் திட்டம் குறித்து உடனடிக் கருத்து எதையும் தெரிவிக்க அரசு மறுத்துவிட்டது.
விடுதலைப்புலிகளின் சார்பில் திரு. லோரன்ஸ் திலகர் அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள இந்தத்தீர்வுத்திட்டத்தின் விபரங்களை வெளியிட அமைச்சர் மறுத்துவிட்டார். புலிகளின் உத்தேச தீர்வுத்
(4-ம் பக்கம் பார்க்க)

## ...ரமுந்திரிகைமுகாமிலிருந்து ...ராணுவத்தினர் பின்வாங்கினர்

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தின் ...ந்திரிகைப் பண்ணை சிறி... இராணுவ முகாமில் ...கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அம்முகாமை விட்டு பின்வாங்கிச் சென்றுள்ளனர்.
மண்கிண்டிமலை போன்று மன்னார் மாவட்டத்தின் காட்டுப்புறத்தை அண்டியுள்ள இம்முகாமையும் விடுதலைப்புலிகள் தாக்கக்கூடும் என்ற அச்சத்தின் விளைவாகவே இப்
(4-ம் பக்கம்பார்க்க)

## ...விஸில் 300 ஈழத் தமிழரின் ...ஞ்சவிண்ணப்பம் நிராகரிப்பு

(பேர்ன்)
சுவிஸில் இவ்வருடம் இது ...யும் தஞ்சம் புகுந்த 800 ...கைத் தமிழ் அகதிகளின் ...யின் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகச் சுவிஸிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, 600 ஈழத் தமிழ் அகதிகளை இவ்வாண்டு டிசம்பர் மாதத்துக்குள் திருப்பி அனுப்புவதென்று சுவிஸ் அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரி
(4-ம் பக்கம் பார்க்க)

## பளுகாமம் மோதலில் இராணுவ சிப்பாய் பலி

(மட்டுநகர்)
மட்டு. பளுகாமம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நாவற்குடா பிரதான வீதி வரை காவலில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கு பளுகாமம் முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் காலை உணவு கொண்டுவந்த இரண்டு
(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் அதிரடிப்படை ஆக்கிரமிப்பு

(மட்டுநகர்)
மட்டு மாவட்டத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் ஒன்பது இடங்களில் புதிதாக முகாம் அமைத்துள்ளனர்.
அம்பாறை - மட்டக்களப்பு எல்லையான பெரிய நிலாவணை கிராமத்திலிருந்து 16 மைல் தூரம்வரையான மட்டு. மாவட்டம் அதிரடிப் படை
(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். கடலேரியில் பீரங்கிபடகுகளுக்கு பலத்த பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)
கல்முனைக் கடல் பகுதியில் இருந்து பெரும் பாதுகாப்புடன் இரண்டு பீரங்கிப் படகுகள், பூநகரி நாகதேவன் துறைக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

## மருத்துத்துறையில் நிவாரணப் பணிகளை செஞ்சிலுவை நிறுத்தியது

(கொழும்பு)
பருத்தித்துறை கரைப்பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணப் பணிகளை நிறுத்திவிட்டதாக இராணுவ அதிகாரிகள் கூறியதாக பி. பி. ஸி. தெரிவித்தது.
இந்தப் பகுதியில் தாக்கல் நிவாரணப் பணிகளைத் தொடருவதற்கு முன்னர் போர் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வேண்டுகோள் விடுத்ததாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

## இன்று பாடசாலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
பாடசாலைகள் 3ம் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றன.
க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை விடைத் தாள்கள் மதிப்பீடு செய்யப்படும் கொழும்பில் உள்ள 6 பிரபல பாடசாலைகள், செப்டம்பர் 15ம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.-157இ

# வலுக்குறைவுற்றோர் விபரம் திரட்ட இணையம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலுக்குறைவுற்றோர் உழைப்பாளரை இழந்த பெண்கள் தொடர்பான ஆய்வுகளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய அமைக்கப்பட்ட மாவட்ட இணைப்புக் குழு யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் அவ்வவ் கிராம சேவையாளர் பிரிவிலிருந்து மேற்படி பாதிப்புற்றோரின் புள்ளி விபரங்களை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் பெற்று வருகின்றது.

இப்புள்ளிவிபர அடிப்படையில் எதிர்கால உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும், பிறப்பிலிருந்தோ அன்றி அண்மைக்கால வன்செயல்களினாலோ இடைவிட்டோர் ஊனமுற்றோர் தமது பகுதிக்குரிய கிராமசேவையாளரூடாக தம்மை பதிவு செய்து கொள்ளுமாறும் எனவும் இணைய வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

ஒவ்வொரு கிராமசேவையாளர் பகுதி புள்ளி விபரங்களும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக தொகுக்கப்பட்டு யாழ். மாவட்ட வலுக்குறைவுற்றோர் புள்ளிவிபரம் பெறப்பட்டு அதனூடாக அவர்களுக்குரிய உதவி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. 158-வி)


## விளம்பரம்


### வியாழ மாற்றம் பலாபலன்கள்

"ஜோஸியர்" முத்திரை சிறுவர்களுக்கு அறிவுநூல். கல்வியற்புலத்துக்கு ஆய்வு நூல் பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலாபலன்கள் சிறீகாந்தா, மலிவன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (வியாபாரிகளுக்கு கழிவுண்டு.) (கி 4.2)

## நீதிமன்ற விசாரணை

(உடுவில்)

சுன்னாகம் தமிழீழ நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு கூடிய போது பத்துவழக்குகள் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் ஐந்து வழக்குகள் குடும்பவழக்குகளாகவும் நான்கு திருட்டுக்குற்ற வழக்குகளாகவும் ஒரு கசிப்பு வைத்திருந்த குற்றவழக்கும் விசாரணை செய்யப்பட்டன.

நீதிபாளர்களாக திரு. சபூவேந்தன், திரு. க. கேசிகன் திரு.கி ஒப்பிலான் ஆகியோர் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. -109


# அறிவுக் களஞ்சியம் -15

நாளை 2-9-93இல் வெளிவருகிறது!

சிறந்த அறிவியல் ஏடு

விலை ரூபா 12/- மட்டுமே

(எ-3388)


## கிளிநொச்சியில் பனை உற்பத்தி பொருள் ஏற்றுமதி கிராமம்

(உடுவில்)

பனை உற்பத்திப் பொருட்கள் விரைவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளன. இதற்கான ஏற்றுமதிக் கிராமம் ஒன்று கிளிநொச்சியில் உருவாக்கப்பட்டு வருகின்றது.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் வடக்கு கிழக்கு மாகாணப் பொறுப்பதிகாரி திரு. ம. இலவோகசுந்தரம் இத்தகவலை தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பனை உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல வரவேற்பு இருப்பதாகவும், நமது பனை உற்பத்திப் பொருட்களை விரைவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பனம் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு வசதியாக உருவாக்கப்பட உள்ள இந்த ஏற்றுமதிக் கிராமங்களில் சுமார் நூறு பேர் வரை பயிலுநர்களாக நியமிக்கப்படவுள்ளனர். (109)

## இன்று

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலின் பூங்காவனம் இன்று 1ந் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்ணை சந்தையடிமடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சங்காபிஷேகமும் மணவாளக் கோல உற்சவமும் இன்று 1ந் திகதி காலை 7 மணி முதல் மாலை 5-30 மணிவரை நடைபெறவுள்ளது. (ச)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு கழகம். விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்அவுட் போட்டியில் இன்று கலந்து கொள்ளும் கழகங்களின் விபரம்:

பாடும்மீன் கழகத்தை எதிர்த்து ஸென்ஹென்றியனும் 2ம் ஆட்டத்தில் சென்மேரீஸ் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய கழகமும் மோதும். (வி)


# SPECIAL SPOKEN ENGLISH

ஆரம்ப எழுத்துக்களிலிருந்து ஆங்கில உரையாடல் வரை கற்பிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு பயிற்சியளிக்கப்படும், முன் அனுபவம் தேவை இல்லை

**Syllabus:**

1. BASIC GRAMMAR
2 READING
3 WRITING
4. VOCABULARY
5 CONVERSATION
6 ETIQUETTE

Lectures by Mr. A. RAJAGOPALAN
Mr. SAM SOMASUNDRAM

**ஆரம்பம்: 06-09-93**

நேரில் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அருச்சுனா வீதி)
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(ஏ 3387)



# பொது அறிவித்தல்

## யாழ். மாநகரசபை

31-12-1992 வரையான காலப்பகுதிக்குரிய சோலை வரியை இதுவரை செலுத்தாதவர்கள் தயவுசெய்து கூடியவிரைவில் செலுத்தி மேல்நடவடிக்கையைத் தவிர்த்து சபையுடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 27-08-1993.

(ஏ 3385)



# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

★ **றீவைன்டிங்**

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

★ **மோட்டர் சைக்கிள் மெக்கானிசம்**

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டர் சைக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

**பயிற்சிகள் ஆரம்பம்: 06-09-93** (கிழமை நாட்கள்)

விபரங்களிற்கு:

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(கி-3386)



# 2-ம் ஆண்டு நினைவு



## திருமதி லூர்து திரேசா ஜோன்னுத்துரை

அல்லைப்பிட்டி-3

மலர்வு: 09-08-1926 — உதிர்வு: 01-09-1991

அன்பின் திருவுருவே! பண்பின் சிகரமே!
பாசத்தின் உறைவிடமே! எங்கள் அம்மா!
ஈராண்டுகளென்ன ஈராயிரமாண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு
எம்மை விட்டகலாதம்மா!

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள்

94, 4-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(கி-436)

மனிவாக்கு
சட்டாயத்தின் பேரில் செயல்படுத்த வேண்டிய சட்டம் எதுவும், பொது மக்கள் உணர்வைவிடப் பலமாக இருக்கமுடியாது.
-ஆபிரகாம் லிங்கன்

# நமது நோக்கு

## கழுதை தேய்ந்து...!

புதிய ஜனாதிபதி பதவியேற்றதும் விரைவில் விடிவு வந்துவிடும் என்ற எண்ணம் ஏற்படும் வகையில் அவரது பேச்சுக்கள் அமைந்தன.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்! மீண்டும் வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான நாடாளுமன்ற ஆட்சி முறை வரும்! தேசிய அரசாங்கம் அமையும் என்றெல்லாம் பட்டங்கள் பறக்கவிடப்பட்டன!

இவை எல்லாம் அறுந்து விட்ட பட்டங்கள் ஆகிவிடுமோ என்று மக்கள் இன்று எண்ணத் தொடங்கிவிட்டார்கள்.

காரணம் என்ன? பேச்சு வார்த்தை, அமைதித் தீர்வு, யுத்த நிறுத்தங்கள் என்ற சொற் பிரயோகங்கள் மறக்கப்பட்டு, இராணுவத் தீர்வு, நிராயுத பாணியாக்கல் என்ற பழைய பல்லவிகளே பாடப்படுகின்றன!

சுதந்திரக் கட்சியில் உட்பூசலைப் பயன்படுத்தி, அதன் ஒரு பகுதியைத் தேசிய அரசில் இணைக்க முயற்சி எடுக்கப்பட்டது! காரியம் கைகூடவில்லை!

எம். ஈ. பி. கட்சித் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுடன் பேசிப்பார்த்தார்கள்: சரிவரவில்லை!

"ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இதோ இணையப் போகின்றது. பேச்சுவார்த்தைகள் முடிந்துவிட்டன. இன்னாருக்கு இன்ன பதவிகள். இணைவதற்கு நாளும் பார்த்தாகிவிட்டது!" என்றெல்லாம் இருதரப்பிலும் பேசி மகிழ்ந்தார்கள்! அவர்களின் ஆதரவுடன் மேல்மாகாண முதலமைச்சராகிவிட்ட சந்திரிகாவையும் கெட்டனவுகளையும் நாணவைத்தார்கள்! இணைப்பு புஷ்வாணமாகி விடுமோ?

காமினிக்கு மட்டும் தான் அமைச்சர் பதவி என்ற கருத்து வெளியாகியிருக்கிறது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிட்ட கதை ஆகிவிட்டது!

"கட்சியைக் கைவிட்டுத்தான் காமினியார் வரவேண்டும். வேண்டுமானால் அவர்கள் கியூவில் நின்று ஐ. தே. கட்சிக்கு விண்ணப்பம் போடட்டும்!" என ஜே. ஆர். பேசியுள்ளார்.

டீ. எஸ். சேனநாயக்கா தோற்றுவித்த யூ. என். பியை மாமன், மருமகன் (Uncle Nephew Party) கட்சி எனக் கேலி செய்தார்கள்! டி. எஸ்., சேர். ஜோன் உறவை வைத்து

இன்று ஜே. ஆர்., ரணில் உறவை வைத்து கட்சியை எப்படிக் கூறப் போகிறார்களோ?

# ★ அமெரிக்க கடலில் பயங்கரம்
# 6 பேருடன் சென்ற கப்பலை
# திமிங்கிலம் அப்படியே விழுங்கியது

(வாஷிங்டன்)

அமெரிக்க கடலில் பயங்கரச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. ஆறு பேருடன் சென்ற அதிவேக விசைப்படகை 145 அடி நீள திமிங்கிலம் சுருட்டி விழுங்கியது.

அமெரிக்காவின் புளோரிடா கடற்கரையிலிருந்து அண்மையில் ஆறு பேரடங்கிய உல்லாச பயணிகள் குழுவினர் 45 அடி நீளமான படகொன்றில் புறப்பட்டுச் சென்றனர். சில மைல் தூரம் ஜாலியாக நீலக்கடலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது திடீரென்று கடலின் மடியிலிருந்து ஒரு பெரிய தலை உயர்ந்தது. அதிர்ச்சியுடன் பார்த்தவர்கள் உசாராவதற்கிடையில் ஒரு பழைய ரயில் எஞ்சினைப்போல் அந்தப் பயங்கரப் பிராணி படகை நோக்கி வந்து வாயைப் பிளந்தது.

கண்மூடித் திறப்பதற்கிடையில் அப்பிராணி படகை வாயில் கவ்வி விழுங்கியது. படகோடு சேர்ந்து உள்ளே இருந்த ஆறு பேரும் திமிங்கிலத்தின் வயிற்றுக்குள் தீனியாக உள்ளே போயினர். இச்சம்பவத்தை இன்னொரு உல்லாச பயணிகள் படகில் இருந்தவர்கள் திகிலோடு பார்த்தபடி நின்றார்கள். திமிங்கிலம் வயிற்றுக்குள் படகு சென்றதும் அது வாயை மூடிய சத்தம் பயங்கரமாக இருந்ததாம்.

இவ்வேளையிலும் அவர்கள் படகிலிருந்து எடுத்த புகைப்படம்தான் அந்தப் பிராணி திமிங்கிலம்தான் என அடையாளம் காண உதவியிருக்கிறது. இதன் வால் மட்டும் 30 அடி உயரம் இருக்குமென அவர்கள் தெரிவித்துள்ளதாக அமெரிக்காவிலிருந்து வெளிவரும் பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (71-கி)

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்ட வெளியீடான கவிஞர் அல்வாயூர் வே. ஐயாத்துரையின் "வளர் தெங்கு" சிறுவர் கவிதை நூல் அறிமுகவிழா நாளை 2ம் தேதி வியாழக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு அல்வாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

## இடம்பெயர்ந்தவர்களுக்கு எவ். ஆர் ஜி. மூலம் உதவி

(யாழ்ப்பாணம்)

ஜெர்மன் ஜனநாயக குடியரசு எவ். ஆர் ஜி.) நிதியுதவியின் ஆதரவில் இடம்பெயர்ந்து வாழ்வோருக்கான மேம்பாட்டுத்திட்டங்களையும் அபிவிருத்திசேவைகளையும் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் சண்டிலிப்பாய், சாவகச்சேரி, உடுவில் வருத்தித்தித்துறை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இடம்பெயர்ந்து தங்கியிருப்பவர்களுக்கு குடிசை அமைப்பு, குடிசைத் திருத்தம் கழிவறை அமைத்தல், குழாய் கிணறுகளைப் பொருத்தி குடிநீர் வசதியை மேற்கொள்ளும் தற்போன்ற நடவடிக்கைகளை இணையம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு இடம்பெயர்ந்தோருக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை மூலதாரமாகக் கொண்டே இத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. (158-கி)

## புதுடில்லி நீதிமன்றில் குண்டு வெடிப்பு

(புதுடில்லி)

புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் நீதிமன்றத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது.

இக்குண்டு மேற்படி நீதிமன்றத்தின் மலசல கூடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததென்றும், குண்டு வெடித்த இடத்தில் 'கியா' இலக்கத்தின் துண்டுப்பிரசுரம் ஒன்றைதாம் கண்டெடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இக்குண்டு வெடிப்பில் யாரும் காயமடையவில்லை என்றும் கூறப்படுகின்றது. (வி)

## புதிய குடிசைகள்

(கொழும்புத்துறை)

மானிப்பாயில் செயல்பட்டு வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த மக்களுக்கு புதிதாக 180 குடிசைகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது. 154

## மணவாளகோல திருவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி இராமநாதேஸ்வரம் திருக்கோவில் மணவாளக்கோலத் திருவிழா இம்மாதம் 4ம் தேதி சனிக்கிழமை நடைபெறும் அன்று காலை சங்காபிஷேகம் விசேடபூசை அன்னதானம் நடைபெற்று பார்வதி சமேதப் பரமேஸ்வரப் பெருமானுக்கு அன்று மாலை திருவூஞ்சல், திருக்கல்யாணம் பூந்தண்டிகைத் திருவுலாவுடன் மணவாளக் கோலத் திருவிழா நிறைவு பெறும்.

## தமக்கு பாதுகாப்பு தருமாறு குமரி அனந்தன் கோரிக்கை

(சென்னை)

ஜனநாயகக் கட்சித்தலைவர் ஆந்திரவதாரின் தமக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என தமிழக சட்டப்பேரவை இந்திரா காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் தமிழக ஆளுநரைக் கேட்டுள்ளார்.

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியை சந்தித்த அவர் தாம் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் தமது பாதுகாப்பு உறுதிசெய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்திய அவர் இது தொடர்பான மகஜர் ஒன்றையும் தமிழக ஆளுநரிடம் கையளித்தார். (க)

## க.பொ. த. (உ\த) வகுப்பில் குறைந்த மாணவராயின் வேறு பாடசாலையுடன் இணைப்பு

(வட்டுக்கோட்டை)

ஒரு பாடசாலையில் 15 மாணவர்களுக்கும் குறைவாகவுள்ள க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் வேறு பாடசாலையுடன் இணைக்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் க. பொ. த உயர்தர வகுப்புக்களில் பாடரீதியாக பார்க்கும் போது ஒரு பாடத்திற்கு ஆறு ஏழு மாணவர்கள் இருப்பதாகவும் இதனால் ஆசிரியர்கள் வீணடிக்கப்படுகிறார்கள் எனவும் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே 15 மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலை மாணவர்களை அருகாமையில் உள்ள பாடசாலையோடு இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (139கி)

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

## விவசாயப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்திலே தமது கல்வியை முடித்துக் கொண்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு விவசாயத்துறையில் ஒன்பதுமாத கால பயிற்சியினை இலவசமாக வழங்கி தொழில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

பயிற்சியினை திருப்திகரமாக முடித்துக்கொண்டு வெளியேறுபவர்களுக்கு திறமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

விவசாய பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்கள் க. பொ த (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும், 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு க. பொ. த (உ/த) பரீட்சையில் தாவரவியல், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருப்பின் விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், விண்ணப்ப முடிவு திகதி 6-9-93 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் கடந்த மாதம் 24ம் திகதி அதிகாலை 12 மணியளவில் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப். தமிழ் மறவன், (மேகவண்ணன் பூசகர் - மாங்குளம்), லெப் மழவேஸ் (செல்லத்தம்பி விநாயகர் - நெடுங்கேணி) ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவடைந்தவர்களாவர். (க-கி)

## விவசாய அறிமுக அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலேயுள்ள பயிர்ச் செய்கையாளர் அனைவருக்கும் விவசாய அறிமுக அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் சகல வட்டங்களிலும் அமைந்துள்ள கிராமிய உற்பத்திக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான விபரங்கள் கிராமிய உற்பத்திக் குழுக்களினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன. இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு உங்களுக்கான விவசாய அறிமுக அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுக்கொள்கின்றது.

## இராசிபலன்

01-09-1993
புதன்கிழமை
(தமிழுக்கு ஆவணி 16)

பூரணை மு.ப. 8-20 வரை, சதயம் மாலை 7-10 வரை, சித்தயோகம், இராகு காலம் 12-05 முதல் 1-35 வரை, சுப நேரம் மாலை 4-35 முதல் 6-05 வரை.

மேடம்: உபரி வருமானம். பிறர் நன்மை, தொழில் சிறப்பு.

இடபம்: பணசேமிப்பு, நண்பர் சகவாசம், பயணம்.

மிதுனம்; குடும்ப முறுகல், மாமியார் தொல்லை, அலைச்சல்.

கடகம்; மனக்குறைகள், வயிற்றுவலி, பெண்பகை.

சிங்கம்: நேர்மைக்கு சோதனை, பதவி மாற்றம், பணவரவு.

கன்னி: குடும்பகௌரவம், புத்திக்கூர்மை காரியசித்தி.

துலாம்: தாமதமான செயல், தொழில் நஷ்டம், மனக்கவலை.

விருச்சிகம்: குறும்புத்தனம், ஏமாற்றம், சகோதரவெறுப்பு.

தனுசு: எதிர்பாராத உதவி, குடும்ப சுகம், பாராட்டு.

மகரம்: கடும் உழைப்பு, தொழில் போசனை, பணமுடை.

கும்பம்: உறவினர் வருகை, தொழில்சிறப்பு, விருந்து.

மீனம்: குறைந்த தூக்கம், மேலதிகாரிகள் கெடுபிடி, ஞாபகமறதி.

ஜோஸ்யர்

# பத்து வருட கால ஈழப்போரில் புலிகள் போர்க்களத்தில் பெரும் சாதனை!

## ஏழாயிரம் இலங்கை, இந்திய படைகள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தொடரும் கடந்த பத்து வருடப்போரில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 6962 இலங்கை இந்தியப்படையினர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான படையினர் காயமடைந்துள்ளனர். விடுதலைப்புலிகள் தரப்பில் 5153 போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் (ஆவணி) பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்திலிருந்து 1987 ஜூலை 29 இந்திய – சிறிலங்கா ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியப் படைகள் தமிழீழம் வந்தது வரையான காலப்பகுதியே ஈழப்போர்-1 என அழைப்பர். 1987 ஒக்ரோபர் 10ம் திகதி தொடக்கம் இந்தியப்படைகள் தமிழீழமண்ணை விட்டு வெளியேறும் வரை 1990 மார்ச் 24 வரை நடந்த இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரை இந்திய புலிகள் போர் என அழைப்பர். இந்தியப் படைகளின் முழுமையான வெளியேற்றத்தின் பின் மீண்டும் 1990 ஜூன் 10ம் திகதி சிங்களப்படைகளுடன் ஆரம்பமாகி இன்றும் தொடர்ந்தபடியுள்ள போரை ஈழப்போர்-2 என அழைப்பர்.

சிறிலங்கா இராணுவ உயர் பீடத்தின் அறிக்கையின்படி ஈழப்போர் ஒன்றில் 797 படையினரும், ஈழப்போர் இரண்டில் 5000 படையினரும் கொல்லப்பட்டனர். இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரில் 1165 இந்திய சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் 1500 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் இந்திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

ஈழப்போர் ஒன்றில் 20.000 தமிழ் மக்களும் இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரின் 6000 தமிழர்களும், ஈழப்போர் இரண்டில் 12000 ற்கு மேற்பட்ட தமிழர்களும் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் போயுள்ளனர்.

தமிழர் படையை கட்டியெழுப்பும் முயற்சியில் இப்பத்தாண்டுக்குள் புலிகள் இயக்கம் பெருவெற்றி பெற்றுவிட்டது என்றே கூறலாம். 1983ல் சில பத்துப்பேர்களைக் கொண்டிருந்த புலிகள் இயக்கம் இன்று பல்லாயிரமாகப் பெருகி ஒரு நாட்டின் படையைப் போல மாறிவிட்டது என்பதை உலகமே ஒப்புக்கொள்கின்றது. (சி)

## வீரச் சாவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நேற்று ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச் சாவு அடைந்துள்ளார்.

கப்டன் இரும்பொறை (இராசையா ஜெகதீஸ்வரன், ஸ்ரேசனடி, கோண்டாவில்- யாழ் என்பவரே வீரச் சாவை தழுவிக் கொண்டவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். (சி)

## மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(எழுதுமட்டுவாள்)

மீசாலைச் சந்தியில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம் அடைந்தனர். எதிரும் புதிருமாக வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் பயணம் செய்தவர்களான க. தம்பிப்பிள்ளை (55 வயது), ஏ. நடராஜசுந்தரம் (30 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும், மற்றவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (170-சி)

## கடற்படை சேதத்திற்கு பதிலாக வான் தாக்குதல்

(கொழும்பு)

கிளாலி, பருத்தித்துறை கடற்கரைப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசு யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில நாட்களில் வான் தாக்குதல்களை மேற்கொண்டதாக அரசு ஒலிபரப்பு செய்திகள் தெரிவித்தன.

குறிப்பாக சொக்குவில் கோண்டாவில் பகுதிகளில் ஸ்ரீலங்காபடையினர் கடுமையான வான் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று ரூபவாஹினி தெரிவித்தது. (இ.சி)

## உயர் அதிகாரிகளுக்கு அதிரடிப் பாதுகாப்பு

(கொழும்பு)

முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு பகுதி உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோருக்கு கொழும்பில் தொடர்ந்து அதிரடிப்பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதிலே பெருமளவு எண்ணிக்கையான படையினர் தமது கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதால் படையினர் மட்டத்தில் சலிப்பையும் சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

புலிகளின் இலக்குகள் பற்றி சரியான தகவல்களைப் பெற முடியாதுள்ளதால் எந்த நேரமும் இந்த அதிரடிப்பாதுகாப்பு கடமைக்கு படையினர் தயார் நிலையில் இருக்கவேண்டியுள்ளதாம். (சி)

## கண்டனக் கூட்டம்

(கொழும்புத்துறை)

சிவாலயங்கள் மீதும் தரும நிலையங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் வான் தாக்குதல்களைக் கண்டித்து யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் இன்று மாலை 4-00 மணிக்கு பேரவைத் தலைவர் திரு கே. செ. தனபாலன் தலைமையில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் கண்டனக் கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றவுள்ளனர். (154)

### கடற் கரும்புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் திரு. பரா, மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளையவன், கடற் புலிகள் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஆதவன், வலிகாமம் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி சந்திரிகா ஆகியோர் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குக் கடற் கரும்புலிகளின் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவுக் கல் நாட்டப்பட்டது. பின்னர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் ஊர்வலமாக ஊர்தி எடுத்துவரப்பட்டு, நாகர் கோவிலில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது. இதனையடுத்து வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்பட்டது.

வன்னி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இந்த மாவீரர்களின் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்தியில் எடுத்து வரப்பட்டன. வட தமிழீழம் எங்கும் நேற்றுக் கறுப்புக் கொடிகளும், வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டுள்ளதுடன், வீடுகளிலும், பொது இடங்களிலும் கடற் கரும்புலிகளின் உருவப் படங்களை வைத்து மலர் தூவி, மக்கள் தமது அஞ்சலிகளைத் தெரிவித்தனர். -சி-

### பளுகாமம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா ராணுவத்தினரை எதிர்பாராதவிதமாக விடுதலைப் புலிகள் சந்தித்தபோது ஏற்பட்ட மோதலில் ஒரு ராணுவ சிப்பாய் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்.

இவரிடமிருந்து ரி 56-1 ரக துப்பாக்கி ஒன்றும் ரவைக் கூடு ஒன்றும் ஐ. எம் ரவைகள் 30ம் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. (ரி)

### மட்டு.மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிற்கு அருகே தாழங்குடா வரை விஸ்தரிக்கப்பட்ட விசேட அதிரடிப் படை முகாம்கள் தற்போது ஆரையம்பதிவரை அமைக்கப்பட்டுள்ளன.

முன்னர் இவ்விடங்களில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். பேரதீவு, செட்டிப்பாளையம், தேற்றாத்தீவு, தாழங்குடா, மண்முனை, ஆரையம்பதி, அம்பிலாந்துறை, மகிழடித்தீவு, கிரான்குளம் ஆகிய ஒன்பது மாவட்டத்திலுமே அதிரடிப்படையினர் முகாமிட்டுள்ளனர். (சி)

### மரமுந்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவம் வெளியேறியுள்ளது.

ஆறுபிரம் ஏக்கர் பரப்பளவுள்ள மரமுந்திரிகை பண்ணையைப் பாதுகாப்பதற்கென இந்த முகாம் அமைக்கப்பட்டது.

இம்முகாம் விடுதலைப் புலிகளால் 1990-ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் திகதி தாக்கி அழிக்கப்பட்டது.

இம்முகாமில் தங்கியிருந்த 80ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறி சிலாவத்துறை ராணுவமுகாமிற்குச் சென்றுள்ளனர். (சி)

### சுவிஸில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் சுவிஸ் அரசாங்கத்திற்கும் இடையில் கொழும்பில் செய்துகொள்ளப்பட்ட நாடு கடத்தல் ஒப்பந்தத்திற்கு அமையவே, இந்த 600 பேரும் திருப்பி அனுப்பப்படுவர்.

சுவிஸில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழர்களில் 900 பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், தமது பெயரை மாற்றிப் பதிந்தவர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட தடவை தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்கள் ஆகியோரே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -ரி

### யாழ். வந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்வுத்திட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருதிட்டமாக இருப்பதுடன் இறைமை நிலையில் அதனை ஆராய்ந்து பேச்சுவார்த்தை மூலம் சகல கட்சிகளும் இணைந்து அதனைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒரு நிலையில் உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (இ-ரி)

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனை புலிகள் பங்கு பற்றுவார்கள் என இதுவரையும் தம்மால் சரியான தகவல்களைப் பெறமுடியவில்லை என்றும் அவர் கூறினார்.

சின்னப் பையன்கள்தான் பெரும் தாக்குதல்களை நடத்துகிறார்கள். அவர்களிடம் இருக்கும் ராணுவ யுக்திகள், யுத்த தந்திரோபாயங்களை படையினரால் கண்டுபிடிக்க முடியாமையினால் அவர்களை வெல்ல முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

### இனப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தைகள் தோல்வியடைந்தபிறகு புலிகள் இப்போது தான் முதல் முதலாக அமைதித்திட்டத்தை முன்வைத்துள்ளனர்.

தற்போது நிலவும் சூழ்நிலை சாதகமான தொன்றாக இருக்கிறதென்றும் சுமுகமான தீர்வுகளை மேற்கொள்ள இப்பிரச்னைகளில் ஈடுபட்டுள்ள கட்சிகள் இணக்கமான முடிவுகளை அவசியம் மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் கூறினார். (இ கே-சி)

### யாழ். கடலேரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை 9-00 மணியளவில் கல்முனை மற்றும் யாழ் கடலேரியை அண்டிய பகுதிகளுக்கு மேலாக ஹெலிகொப்டர் மற்றும் புக்காரா விமானமும் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

பீரங்கிப் படகுகளிலிருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் இக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் உடன் திரும்பி வந்தனர்.

இந்தப் பீரங்கிப் படகுகள் மீது விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்ற அச்சத்தை ஒட்டியே இவ்வாறு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (157-சி)

## புக்காரா நோட்டத்தினால் அதிர்ச்சியடைந்த ஒருவர் சுயநினைவிழந்தார்

(யாழ்ப்பாணம்)

புக்காரா விமானச் சத்தம் கேட்டு அதிர்ச்சி அடைந்த ஒருவர் சுயநினைவு இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை கோண்டாவில் பகுதியில் இடம் பெற்றது. ஏழாலை மேற்கைச் சேர்ந்த பரமகுரு (வயது 50) என்பவரே சுயநினைவு இழந்தவராவார்.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் வந்த புக்காரா விமானம் ஒன்று, சொக்குவில், கோண்டாவில், அரியாலைப் பகுதிகளில் வட்டமிட்டுக் குறிப் பதிந்து, குண்டு வீசுவது போல் சாகசம் செய்து மக்களைப் பயமுறுத்திச் சென்றது.

அப்போது கோண்டாவில் பகுதியில் பாதுகாப்புக் கருதிப் பதுங்கு குழிக்கு ஓடிச் சென்றவர்களில் ஒருவரான பரமகுரு என்பவர், பதுங்கு குழி வாசலில் அதிர்ச்சியினால் மயக்கம் அடைந்து விழுந்தார். -56

## பாகிஸ்தானில் நேற்று ஆறு பேர் சுட்டுக் கொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நேற்றுபள்ளிவாசல் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் பலியாகினர் மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர்.

முகமது நபியின் பிறந்த நாளான நேற்று தொழுகையில் இருந்த மக்கள் மீது, திடீரென பள்ளிவாசலினுள் புகுந்த துப்பாக்கி நபர்கள், நடாத்திய இத்திடீர் தாக்குதலால் மக்கள் சிதறி ஓடினர்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள பள்ளிவாசலில், மோட்டார் சைக்கிளில் வந்த இந்த இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திய வேகத்திலேயே தப்பிச்சென்றுவிட்டனர்.

எதிர்வரும் ஒக்டோபரில் நடைபெறவுள்ள தேர்தலையொட்டி அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட பூசல்களே இக்கொலைக்கு காரணமென பொலிஸார் தெரிவித்தனர். (சே)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சுன்னாகம் தெற்கு மாதிரி குடியேற்றத் திட்ட திறப்பு விழா இன்று மாலை 5-00 மணிக்கு சுன்னாகம் சிற்றூர் பொறுப்பாளர் திரு. கலியுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10 836/B